



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 304 | 27.04.2026 | MONDAY | CHITHIRAI: 14 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 304 | 27.04.2026 | திங்கள்கிழமை | சித்திரை : 14 | விலை : ரூ.5/-


## "ரவுடிகளை; பாலியல் குற்றவாளிகளை

# 'பாஜக வேட்டையாடி பிடிக்கும்'

## இந்தியா நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து

புது டெல்லி, ஏப்.27-

இந்தியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒப்பந்தம் நாளை (ஏப்ரல் 27 ) கையெழுத்தாகும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். நியூசிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சர் டோட் மெக்ளேயுடன் ஆக்ரா சென்றிருந்தபோது பேசிய கோயல், "இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். பல ஆண்டு கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, நாளை கையெழுத்தாக உள்ளது. இந்த ஒப்பந்தம் காரணமாக



இந்தியாவிலிருந்து நியூசிலாந்துக்குச் செல்லும் பொருட்களில் சுமார் 70 சதவீதம் எந்த இறக்குமதி வரியும் இன்றி அங்கு சென்றடையும். இந்த ஒப்பந்தம், பல துறைகளுக்கு, குறிப்பாக பாரம்பரிய மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கும். நமது ஆக்ரா தோல் வணிகம், உத்தரப் பிரதேச கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் நமது 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' திட்டத்தில் பொருட்களைத் தயாரிக்கும் தச்சர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் இன்னும் பல துறைகளுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

சில மாதங்களில், இது இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான ஒரு வழியாக அமையும். இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதுடன் இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும்" என்றார்.

## மேற்கு வங்கத்தில் மோடி உறுதி

வடக்கு 24 பர்கானாஸ்: ஏப்.27-

மேற்கு வங்கத்தில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு ரவுடிகளையும், பாலியல் குற்றவாளிகளையும் வேட்டையாடிப் பிடிப்போம் என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

மேற்கு வங்கத்தின் பங்கான் நகரில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியால் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. அவர்கள் மிகப்பெரிய துரோகத்திற்கு ஆளாகியுள்ளனர். சந்தேஷ்காலியில் நமது சகோதரிகளுக்கு எதிராகக் கொடூரமான அட்டூழியங்கள் இழைக்கப்பட்டுள்ளன.

திரிணமூல் காங்கிரஸின் காட்டு தர்பார் ஆட்சியின் கீழ், இளம் பெண்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மே 4 ஆம் தேதிக்குப் பிறகு, பாஜக அரசு ஒவ்வொரு ரவுடியையும், பாலியல் குற்றவாளியையும் வேட்டையாடிப் பிடித்து, அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்று கொடுக்கும். பாஜக பெண்களுக்குப் பாதுகாப்பையும்,



வாய்ப்புகளையும் ஒருங்கே வழங்குகிறது.

மேற்கு வங்கத்தில் பாஜக அரசாங்கம், ஒவ்வொரு ஆண்டும் பெண்களின் வங்கிக் கணக்குகளில் ரூ. 36,000 தொகையை நேரடியாகச் செலுத்தும். ஆஷா (ASHA) பணியாளர்கள் மற்றும் பிற பெண் சுகாதாரப் பணியாளர்களின் ஊதியம் குறித்தும் மேற்கு வங்க பாஜக ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. எங்கள் அரசாங்கம் தாய்மார்கள், சகோதரிகள் மற்றும் மகள்களுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பிலான இலவச மருத்துவ சிகிச்சையை வழங்கும்.

பொது சுகாதார மையங்களில் மருத்துவச் சிகிச்சைகளுக்கு 80% கட்டணச் சலுகை வழங்கப்படும். மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்படும். கர்ப்பக் காலத்தில் ரூ.21,000 நிதியுதவியும், மகள்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்யும்போது ரூ.50,000 நிதியுதவியும் பாஜக அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும்.

பெண்கள் சொந்தத் தொழிலைத் தொடங்குவதற்காக வங்கிகளிடமிருந்து ரூ.20 லட்சம் வரை கடன் பெறலாம். வங்கிகளுக்குக் கடன் வழங்கும்போது ஒரு உத்தரவாதம் தேவைப்படும். ஆனால், சகோதரிகளே, அந்த உத்தரவாதத்தை நீங்கள் வழங்கத் தேவையில்லை. அந்த உத்தரவாதத்தை உங்கள் சகோதரனான மோடியே உங்களுக்கு வழங்குவார்.

மேற்கு வங்கத்தின் விளையாட்டு கலாச்சாரத்திற்கு பாஜக ஒரு புதிய உத்வேகத்தை அளிக்கும். திரிணமூல் காங்கிரஸின் 'சிண்டிகேட்' இங்குள்ள விளையாட்டுச் சூழல் அமைப்பையே சீரழித்துவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு கொல்கத்தாவில் நடந்த நிகழ்வுகளும், உலகம் முழுவதும் உள்ள கால்பந்து ரசிகர்களைச் சென்றடைந்த அந்தப் படங்களும், இங்கு நிலவும் 'மகா காட்டு தர்பார்' கலாச்சாரத்தின் நேரடி விளைவுகளே ஆகும். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். 'கேலோ இந்தியா' திட்டத்தின் கீழ், மேற்கு வங்கத்தில் ஒரு புதிய, சிறப்பான விளையாட்டுச் சூழல் அமைப்பு உருவாக்கப்படும்" என்று அவர் கூறினார்.



## தமிழகத்தின் சில மாவட்டங்களில் ஏப்.30 முதல் 3 நாட்களுக்கு கனமழை!

சென்னை, ஏப்.27-

தமிழகத்தில் ஏப்.30 முதல் 3 நாட்களுக்கு நீலகிரி, சேலம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வட கர்நாடகத்தின் உள்பகுதி முதல் குமரிக்கடல் வரை, தெற்கு கர்நாடகத்தின் உள்பகுதி மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 900 மீட்டர் உயரத்தில் நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஏப்.27) முதல் 29ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏப்ரல் 30, மே 1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்.30ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், மே 1ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) மிதமானது முதல் கன மழை பெய்யக்கூடும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் ஏப்.30ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவில் இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தேர்வு செலவின நிதி ரூ.50 லட்சம் நிலுவை சென்னை பல்கலை. மீது ஆசிரியர் சங்கம் புகார்

சென்னை, ஏப்.27-

சென்னை பல்கலைக்கழகம் 8 அரசு கலை அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.50 லட்சம் தேர்வு செலவின நிதியை நிலுவையில் வைத்திருப்பதாக உயர்கல்வித்துறை செயலரிடம் அரசு கல்லூரி ஆசிரியர் சங்கம் புகார் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் பொதுச்செயலாளர் சே. சுரேஷ் உயர்கல்வித்துறையின் செயலருக்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது: சென்னை பல்கலைக்கழகத்தின் கீழ்




121 இணைப்பு கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 100 கல்லூரிகள் தன்னாட்சி அந்தஸ்து பெறாத கல்லூரிகள்.இந்த கல்லூரிகளில், திருத்தணி, பெரும்பாக்கம், ஆர்.கே. நகர், திருவொற்றியூர், குன்றத்தூர், நெமிலி, உத்திரமேரூர் ஆகிய 8 அரசு கலை அறிவியல் கல்லூரிகளும் அடங்கும்.

மேற்குறிப்பிட்ட 8 அரசு கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்து ஒரு பருவத்துக்கு சுமார் ரூ.2 கோடி தேர்வு கட்டணமாக பெறப்பட்டு பல்கலைக்கழகத்துக்கு செலுத்தப்படுகிறது. ஆனால், இக்கல்லூரிகளில் தேர்வு நடத்துவதற்கு உரிய நிதியை சென்னை பல்கலைக்கழகம் வழங்குவதில்லை.கடந்த 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட பருவ தேர்வுகளுக்கு இதுவரை எந்த தொகையும் வழங்கப்படவில்லை. அந்த ஒரு பருவ தேர்வுக்கு மட்டும் 8 அரசு கல்லூரிகளுக்கு வழங்கப்படாத தொகை மட்டும் ரூ.25 லட்சம். கடந்த 2024 நவம்பர், 2025 ஏப்ரல் மற்றும் நவம்பர் ஆகிய 3 பருவ தேர்வுகளுக்கு முன்பணம் மட்டும் வழங்கப்பட்டு இருக்கிறது. அம்மூன்று பருவ தேர்வுகளுக்கான எஞ்சியுள்ள ரூ.25 லட்சம் இன்னும் வழங்கப்படவில்லை.

மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு மேற்குறிப்பிட்ட ரூ.50 லட்சத்தையும் தேர்வு நடத்திய ஆசிரியர்கள் தங்கள் சொந்த நிதியில் இருந்து செலவு செய்துள்ளனர். எனவே, அரசு கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து தேர்வுகள் நடத்துவதற்கு செய்துள்ள செலவினத்தொகை ரூ.50 லட்சத்தை சென்னை பல்கலைக்கழகம் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## போலீஸ் உடையில் வந்து பழக்கடை ஊழியரிடம் ரூ.14 லட்சம் பறிப்பு

வேலூர், ஏப்.27-

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு பகுதியைச் சேர்ந்தவர் தர்ஷீர் (26). இவர் சென்னை, கோயம்பேடு மார்க் கெட்டில் உள்ள ஒரு பழக்கடையில் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். நேற்று முன் தினம் இரவு தர்ஷீர் கடையில் இருந்தபோது, அதன் உரிமையாளர் ஷேக் ரோஷன் என்பவர் அவரைத் தொடர்பு கொண்டு, தான் தற்போது வானகரத்தில் இருப்பதாகவும், கடையில் உள்ள ரூ.14 லட்சம் ரொக்கப் பணத்தை எடுத்துக்கொண்டு உடனடியாக அங்கு வருமாறும் கூறியுள்ளார்.

முதலாளியின் உத்தரவின் படி, தர்ஷீர் பணப் பையுடன் ஆட்டோவில் வானகரம் சென்றார்.




ஆட்டோ நெற்குன்றம் தயாசதன் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்த போது, அங்கு போலீஸ் சீருடையில் இருந்த 2 பேர் ஆட்டோவை வழிமறித்தனர்.

போக்குவரத்து காவலர்கள் போலத் தோற்றமளித்த அவர்கள், ஆட்டோ ஓட்டுநரிடம் ஆவணங்களைச் சரிபார்ப்பது போல நடித்துள்ளனர். பின்னர், ஆட்டோவில் இருந்த தர்ஷீரிடம், "பையில் என்ன இருக்கிறது ?" என்று கேட்டுள்ளனர். தர்ஷீர் தன்னிடம் பணம் இருப்பதாகக் கூறியவுடன். ஒரு காவலர் அவரிடமிருந்த ரூ.14 லட்சம் பணப்பை மற்றும் செல்போனைப் பறித்துக் கொண்டு, அங்கிருந்த ரோந்து வாகனம் போன்ற வாகனம் ஒன்றில் ஏறி மின்னல் வேகத்தில் புறப்பட்டுச் சென்றார்.

மற்றொரு நபர், தர்ஷீரை தனது பைக்கில் ஏற்றிச் சென்று மதுரவாயல் பாலத்தின் கீழே இறக்கிவிட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றார். காவலர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த தர்ஷீர், உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்துக்குச் சென்று விசாரித்தார். அப்போது, அப்பகுதியில் சோதனையில் ஈடுபட்ட காவலர்கள் யாரும் பணம் பறிமுதல் செய்யவில்லை என்பது தெரியவந்தது.

தான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்த தர்ஷீர், இது குறித்து அளித்த புகாரின் பேரில், கோயம்பேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். போலீஸார் அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளைக் கொண்டு. போலீஸ் உடையில் வந்து கைவரிசை காட்டிய அந்த மர்ம நபர்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 8 மாவட்டங்களில் இபிஎஃப்ஓ குறைதீர்ப்பு முகாம்

சென்னை, ஏப்.27–

மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இபிஎஃப்ஓ, இஎஸ்ஐ ஆகியவை இணைந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், குறைகளை விரைவாகத் தீர்க்கவும் குறைதீர்ப்பு முகாம் நடத்துகின்றன. அந்த வகையில், சென்னை உட்பட 8 மாவட்டங்களில் குறைதீர்ப்பு முகாம் (ஏப்.27) காலை 9.15 மணி முதல் நடைபெற உள்ளது.

அதன் விவரம்: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் சார்பில், "வைப்பு நிதி உங்கள் அருகில்" எனும் பெயரில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி முகாம் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய 8 மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்காலிலும் காலை 9 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடைபெறவுள்ளது.




சென்னையில் பிவிஆர் ஹெரிடேஜ், எஸ்ஆர்எல் ஈசிஆர், சென்னை, முதல் தளம், உத்தண்டி சுங்கச்சாவடி அருகே சென்னை என்ற முகவரியிலும், ஸ்ரீ கிருஷ்ண சுவாமி மகளிர் கல்லூரி, ஏசி 48 ஆறாவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை என்ற முகவரியிலும் நடைபெறவுள்ளது.

திருவள்ளூரில் முகப்பேர் தொழிற்பேட்டை, உற்பத்தியாளர் சங்கம், எண்:36, 1வது தெரு, தொழிற்பேட்டை, முகப்பேர் மேற்கு, சென்னை என்ற முகவரியும், காஞ்சிபுரத்தில் ஹுண்டாய் மொபிஸ் இந்தியா லிமிடெட் ஜி1, ஜி4, சிப்காட் இண்டஸ்ட் ரியல் பார்க், இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் என்ற முகவரியிலும், செங்கல்பட்டுவில் பட்டர்ஃபிளை காந்தி மதி அப்ளையன்ஸ் லிமிடெட், 143 புதுப்பாக்கம் கிராமம், வண்டலூர் கேளம்பாக்கம் சாலை. சென்னை என்ற முகவரியிலும் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்களில் புதியதாக தொடங்கப்பட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள், தொழிலாளர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள், முதன்மை உரிமையாளர், ஒப்பந்ததாரர்களுக்குக்கான புதிய சீர்திருத்தங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி, விலக்கு அளிக்கப்பட்ட நிறுவனங்களுடனான கலந்துரையாடல், உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர், முதலாளிகளிடமிருந்து வரும் குறைகளுக்கான தீர்வு, ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் வாழ்க்கை சான்றிதழ்களை சமர்ப்பித்தல் ஆகிய சேவைகள் வழங்கப்படும் என வருங்கால வைப்பு நிதி நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுபள்ளது.



► தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதியில் அண்ணா திமுக வேட்பாளர் எஸ்.பி. வேலுமணி தனது சொந்த ஊரான சுகுணாபுரம் பகுதியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் இன்று வாக்களித்தார்.இந்த நிகழ்வில், அவரது அண்ணன் அன்பரசன் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில், பொதுமக்களும் ஆர்வமுடன் வாக்களித்தனர்.

# "சிறுபான்மை ஜாதிகளை 'குழிதோண்டி புதைத்த' தேர்தல் இது" நாராயணன் திருப்பதி காட்டம்

சென்னை, ஏப்.27–

சிறுபான்மை ஜாதிகளை குழிதோண்டி புதைத்த ஜாதிய தேர்தலாக நடந்து முடிந்த தேர்தல் இருந்ததாக பாஜகவின் மாநில தலைமைச் செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "நடந்த முடிந்த சட்டமன்ற தேர்தலில் ஜாதி, பணம், ஆள் பலம் தான் முக்கிய காரணிகளாக இருந்தன. பணபலம் இல்லாமல் ஆள் பலம் இல்லை; ஜாதி பலம் இல்லாமல் பணபலம் இல்லை. மொத்தத்தில் ஜாதியை ஒழித்து விட்டோம் என்று கூவுகின்ற தமிழகத்தில் ஜாதி இல்லையேல் அரசியலே இல்லை, ஜாதி இல்லையேல் அதிகாரமே இல்லை.

ஜாதி வெறிபிடித்த, ஜாதி அரசியல் உள்ள, ஜாதி வன்மம் மிக்க, எங்கும் ஜாதி, எதிலும் ஜாதி என்று பரவியிருக்கின்ற மாநிலம் தமிழ் நாடு என்றால் அதில் சந்தேகமேயில்லை. ஜாதியே அரசியல், ஜாதியே பணம், ஜாதியே வாழ்க்கை, ஜாதியே அதிகாரம் என்பது தான் 'திராவிட மாடல்'.

தொழில் சார்ந்து வாழ்க்கை முறையென வடிவமைக்கப்பட்டிருந்த ஜாதிய கட்டமைப்பை தகர்த்தெறிந்து தங்களின் அதிகாரத்திற்காக, சொத்துக்குவிப்பிற்காக, குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக, சுயநலத்துக்காக, ஓட்டுக்காக, அந்த ஓட்டு தரும் பதவிக்காக, அந்த



பதவி தரும் பணத்திற்காக 'ஜாதிய அரசியல்' என்று கட்டமைக்கப்பட்டது தான் 'திராவிட மாடல்'.

ஒரு புறம் ஜாதி என்பது ஒவ்வொரு சமுதாயத்தின் வாழ்க்கை முறை என்பதையும், ஜாதி ரீதியாக கட்டமைக்கப்பட்டது தான் சமுதாயம் என்பதையும் மறைத்து அல்லது செய்யும் தொழிலின் மூலம் உருவானது தான் ஜாதி என்பதை ஏற்க மறுத்து, கலப்பு மணம் தான் ஜாதியை ஒழிக்கும் மந்திரக்கோல் என்ற மாயையை/ பொய்யை பரப்பி, சாலைகளில் உள்ள பெரியோர்களின் பெயரில் இருந்த ஜாதிப் பெயரை நீக்கி, அந்தப் பெரியோர்களின் ஜாதிகளின் பெருமையை குலைக்க சதி செய்து, ஜாதியை ஒழித்து விட்டதாக மார்தட்டிக் கொண்டு, மறுபுறம் கட்சியில் ஜாதிக்கொரு பதவி, ஆட்சியில் ஜாதி ரீதியான பொறுப்புகள், அரசியலில் வாக்குகளை பெறுவதற்கு ஜாதி ரீதியாக கட்சிகளை உருவாக்கி, அரசு நிர்வாகத்தில் ஜாதிய ரீதியாக நியமனங்களை செய்து, மக்களிடையே ஜாதி சங்கங்களை தூண்டி விட்டு குளிர்காயும் ஜாதி அரசியலை தான் 'திராவிட மாடல்' 60 வருடங்களாக செய்து கொண்டிருக்கிறது.

சிறுபான்மை மதத்தை அல்ல, சிறுபான்மை ஜாதிகளை குழிதோண்டி புதைத்த ஜாதிய தேர்தல், 2026 சட்டமன்ற தேர்தல். ராமானுஜரின் சமத்துவ சீர்திருத்தத்தை, பாரதியார் வலியுறுத்திய 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்ற தொலைநோக்குப் பார்வையை, ராஜாஜி செயல்படுத்திய ஜாதி தீண்டாமை ஒழிப்பை, அம்பேத்கர் முன்னெடுத்த சமத்துவத்தை மறந்து, மறைத்து ஜாதிய அரசியலை புகுத்திய 'திராவிட மாடல்' அரசியல் தான் 2026 சட்டமன்ற தேர்தல். ஜாதி, பணம் இவை இரண்டும் தான் இனி தமிழக அரசியல் பாதை!" என தெரிவித்துள்ளார்.

# "ரயில்வேயில் ஆட்குறைப்பு நடவடிக்கை கூடாது" இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்


சென்னை, ஏப்.27–

இந்திய ரயில்வேயில் மொத்தப்பணியிடங்களில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளை ரயில்வே மேற்கொள்ளக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய ரயில்வேயில் மொத்தமுள்ள பணியிடங்கள் 12 லட்சத்து 80 ஆயிரமாகும். இதில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை அதாவது 29 ஆயிரத்து 608 பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது மக்கள் நலனுக்கு எதிரானது. இத் தொழிலாளர் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையால், தெற்கு ரயில்வேயில் மட்டும் ஏறத்தாழ 2,000 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். இது ரயில் பயணிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். விபத்துகளை தடுக்க உதவாது.

இந்தியாவில் நாள்



தோறும் 13 ஆயிரத்து 17 ரயில்கள் உட்பட தினசரி 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதற்கேற்ப புதிய பணியிடங்களை உருவாக்கி, நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கு பதிலாக பணி குறைப்பு மேற்கொள்வது என்பது சரியல்ல.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு, தற்பொழுது ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வதும், வேலை வாய்ப்புகளை ஒழித்துக் கட்டுவதும் அளித்த வாக்குறுதிக்கு நேர் எதிரானதாகும்.

இன்று இந்தியா எதிர்கொள்ளும் முதன்மையான பிரச்சினை வேலையில்லா திண்டாட்டமாகும். இது இளைஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், விரக்தியையும், கோபத்தையும் உருவாக்கி உள்ளது .

வேலையில்லா திண்டாட்டத்தால், மது, போதைப் பழக்கம், கொலை, கொள்ளை, தற்கொலைகள், வன்முறைகள் உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதில் கவனம் செலுத்தாத ஒன்றிய பாஜக அரசு, ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நாட்டின் இளைய தலைமுறையினரின் நலன்களுக்கும், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கும் எதிரானதாகும்.

இந்த ஆட் குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவது மட்டுமல்லாமல், தற்காலிக அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து ரயில்வே பணியாளர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். புதிய பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்திட வேண்டும். ரயில்வேயை படிப்படியாக தனியார்மயமாக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் சென்றால் குண்டர் சட்டம்

## திருவள்ளூர் ஆட்சியர் எச்சரிக்கை

திருவள்ளூர், ஏப்.27–

ஆற்றுப்படுகைகள், அரசு புறம் போக்கு நிலங்களில் இருந்து உரிய அனுமதியின்றி கனிமங்கள் எடுத்துச் செல்வோர் மீது குண்டர் சட்டம் பாயும் என ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: திருவள்ளூர் மாவட்டத்தில், ஆற்றுப் படுகைகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பட்டா நிலங்களில் இருந்து அரசின் உரிய அனுமதியின்றி கள்ளத்தனமாக கனிமங்களை வெட்டியெடுத்து, வாகனங்களில் கடத்திச் செல்வது தொடர்பாக கடந்த 16ம் தேதி திருவள்ளூர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களால் ஊத்துக்கோட்டை வட்டத்தில் தீவிர ரோந்து பணிகள் மேற்கொண்டதில், உரிய அனுமதி நடைச் சீட்டுயில்லாமல் கள்ளத்தனமாக கனிமங்கள் (கிராவல் மற்றும் சாதாரண மண் ஏற்றிச் சென்ற 3 பாரஸ் வாகனங்கள் கைப்பற்றப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே, இதுபோன்ற வாகனங்களை கண்காணிக்க தொடர் தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளு மாறு வருவாய்த் துறை, கனிம வளத்துறை, காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வதுடன், இக்குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபடு வோரைக் கண்காணித்து அவர்கள் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஆட்சியர் பிரதாப் கூறியுள்ளார்.

# புதுச்சேரியில் 2026-27 கல்வியாண்டில் இருந்து சிபி.எஸ்.இ. பள்ளிகளில் பிரெஞ்சு மொழி நீக்கம்

புதுச்சேரி, ஏப்.27–

புதுச்சேரியில் 2026–27 கல்வியாண்டில் இருந்து சிபிஎஸ்இ பள்ளிகளில் பிரெஞ்சு மொழி நீக்கம். புதிய மொழிக் கொள்கை ஒரு வெளிநாட்டு மொழியை மட்டுமே அனுமதிப்பதால் இம்மொழி நீக்கப்பட்டுள்ளது. 2ம் மொழியாக பிரெஞ்சை தேர்வு செய்த மாணவர்கள் ஏற்கனவே பயின்ற மொழிக்கே மீண்டும் மாறுவார்கள் என தெரிவிப்பு. ஒன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பிரெஞ்சு பயின்று வரும் மாணவர்கள் நிலை என்னவாகும் என கல்வியாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

# "குளு குளு ஊட்டி ஒரு கேடா என்றவர்கள் இவர்கள்" முதல்வர் பயணம் குறித்து தமிழிசை காட்டம்

சென்னை, ஏப்.27–

'பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள்' என முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதியின் ஓய்வு பயணம் குறித்து பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ்



பதிவில், 'ஓட்டளிக்க வரிசையில் நின்ற மக்கள் எல்லோரும் கோடையில் வீட்டில் தன் பணியில்.. ஆனால் பணியில் இருக்க வேண்டிய முதல்வர் வாரிசுகளை கூட்டிக்கொண்டு கொடைக்கானலில். வாக்களிக்க துணை நின்ற மக்கள் தங்கள் அன்றாட பணியில், ஆனால் துணை முதல்வர் அயல் நாட்டு பயணத்தில். அரசியல் என்பது அனைவருக்கும் சமமே. திமுகவின் இந்த ஏற்றத்தாழ்வு மனப்பான்மை, அவர்களின் ஏற்றத்திற்காக அல்ல இறக்கத்திற்காகவே.

ஆய்வு செய்ய வேண்டியவர்கள் ஓய்விற்கு செல்கிறார்கள். ஆனால் இதே கூட்டம் தான் அன்று அரசு வேலையாக ஊட்டி சென்ற காமராஜரை கும்பி எரியுது குடல் வேகுது குளு குளு ஊட்டி ஒரு கேடா என்று கேலி பேசியவர்கள். புரிந்து கொள்ளுங்கள் இவர்களை. பொதுநலம் என்று பேசிக்கொண்டு தெரியும் இந்த சுயநலவாதிகளை' எனத் தெரிவித்துள்ளார்.

# ரயில் பாதை மேம்பாட்டு பணி காரணமாக காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம்

கர்நாடகா, ஏப்.27–

ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் காரணமாக, காவேரி விரைவு ரயில் உட்பட 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கர்நாடக மாநிலம் பெங்களூரு கன்டோண்மென்ட்டில் ரயில் பாதை மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதனால், இத்தடத்தில் 23 ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, சென்னை சென்ட்ரல் அசோகாபுரம் காவேரி விரைவு ரயில் (16021), வரும் ஜூன் 3, 4, 5, 6, 9, 10, 11, 21, 26 ஜூலை 2, 5, 6ம் தேதிகளில் ரத்து செய்யப்படும்.

அசோகாபுரம் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில் (16022) வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11, 12, 22, 27 ஜூலை



3, 6, 7ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும் கே.எஸ்.ஆர். பெங்களூரு சென்னை சென்ட்ரல் அதிவிரைவு ரயில் (12658), வரும் ஜூன் 4, 5, 6, 7, 10, 11,12, 22, 27 ஜூலை 3, 6, 7 ஆகிய தேதிகளி லும், சென்னை சென்ட்ரல் பெங்களூரு அதி விரைவு ரயில் (12657) வரும் ஜூன் 5, 6, 7, 8, 11, 12, 13, 23, 28 ஜூலை 4, 7, 8ம் தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

கர்நாடக மாநிலம் யஷ்வந்த் பூர் சென்னை சென்ட்ரல் ரயில் (12291), வரும் ஜூன் 5, 12, ஜூலை 3ம் தேதிகளிலும், சென்னை சென்ட்ரல் யஸ் வந்த்பூர் அதி விரைவு ரயில் (12292) வரும் ஜுன் 6, 13, ஜூலை 4 தேதிகளிலும் ரத்து செய்யப்படும்.

மைசூர் சென்னை சென்ட் ரல் அதி விரைவு ரயில் (22681) வரும் ஜூன் 10ம் தேதியும். சென்னை சென்ட்ரல் மைசூர் அதி விரைவு ரயில் (22682) வரும் ஜூன் 11ம் தேதியும் ரத்து செய்யப்படும்.

கே.எஸ். ஆர். பெங்களூரு ஜோலார்பேட்டை, ஜோலார்பேட்டை கே.எஸ்.ஆர்.பெங்களூரு பயணிகள் ரயில்கள் (6655066549) வரும் ஜூலை 7ம் தேதியன்று ரத்து செய்யப்படுகிறது.

ஜோலார்பேட்டை கேஎஸ்ஆர் பெங்களூரு நகர் மெமு ரயில் (16519) பகுதி ரத்து செய்யப்படும். இதுதவிர, 12 ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்பட உள்ளன. இத்தகவல் தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மெரினா கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வழித்தடத்தில் பவர் ஹவுஸ் முதல் பனகல் பூங்கா வரை தண்டவாள பணி ஜூலையில் தொடக்கம்: அதிகாரிகள் தகவல்

சென்னை, ஏப்.27–

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ம் கட்டத்தில், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் முதல் பனகல் பூங்கா வரையிலான வழித்தடத்தில் தண்டவாளம் அமைக்கும் பணிகளை வரும் ஜூலை மாதம் தொடங்க மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 54 கிலோ மீட்டர் தொலைவில், விமான நிலையம் முதல் விம்கோ நகர் மற்றும் பரங்கிமலை முதல் சென்ட்ரல் என 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயங்குகிறது. சென்னையின் வளர்ச்சி மற்றும் முக்கிய பகுதிகளை இணைக்கும் வகையில், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம், 3வது வழித்தடத்தில் 116.1 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.63,246 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதாவது, மாதவரம் சிறுசேரி வரை (45.4 கி.மீ.) 3வது வழித்தடத்திலும், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை (26.1 கி.மீ.) 4வது வழித்தடத்திலும், மாதவரம் சோழிங்கநல்லூர் வரை (44.6 கி.மீ) 5வது வழித்தடத்திலும் பணிகள் நடைபெறுகின்றன. இதில், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவிலான வழித்தடத்தில் பூந்தமல்லி போரூர், போரூர் வடபழனி வரை பணிகள் நிறைவடைந்துள்ளன. அதைத் தொடர்ந்து, பூந்தமல்லி போரூர் வரையிலான தடத்தில் மெட்ரோ ரயில் மற்றும் வழித்தடத்துக்கு பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான சோதனையை இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் குழுவினர் கடந்த ஆண்டு ஆக.16 முதல் ஒரு வாரத்துக்கு மேல் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி தலைமையிலான குழுவினர், பூந்தமல்லி வடபழனி இடையே அதிவேக சோதனை ஓட்டத்தை மேற்கொண்டனர். அப்போது, மெட்ரோ ரயிலை மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் இயக்கி சோதித்தனர். மேலும், சிக்னல் அமைப்பு, பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.பூந்தமல்லி மெட்ரோ நிலையம் போரூர் சந்திப்பு வரையிலான 14.6 கி.மீ நீளமுள்ள வழித்தடம் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் திறக்க மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.



இதில் 10 நிலையங்கள் உள்ளன. போரூர் சந்திப்பு முதல் வடபழனி வரை, ஒரு நேரத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு ரயில் மட்டுமே இயக்கப்பட உள்ளது.

இந்நிலையில், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் முதல் பனகல் பூங்கா வரை தண்டவாள பணிகள் வரும் ஜூலை மாதம் தொடங்க உள்ளது. இந்த 2.9 கி.மீ தூரத்திற்கு, இருபுறமும் சேர்த்து மொத்தம் 5.8 கிலோ மீட்டர் நீளத்திற்கு தண்டவாளங்கள் அமைக்கப்பட உள்ளன. தற்போது மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதன்மை நோக்கம், பூந்தமல்லி போரூர் வடபழனி இடையிலான உயர் மட்டப் பாதையை முதலில் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதாகும். அதனைத் தொடர்ந்து, மார்ச் 2027க்குள் இந்த பாதையை பனகல் பூங்கா வரை நீட்டிக்க அதிகாரிகள் இலக்கு நிர்ணயித்துள்ளனர்.

இந்த திட்டத்தில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், பூந்தமல்லியில் இருந்து உயர்மட்ட பாதையாக வரும் மெட்ரோ ரயில், பனகல் பூங்காவில் தான் சுரங்கப்பாதைக்குள் நுழைகிறது. 2ம் கட்ட திட்டத்தில் பயணிகள் பயன்படுத்தப்போகும் முதல் சுரங்கப்பாதை நிலையமாக பனகல் பூங்கா அமைய உள்ளது.இந்த இடைப்பட்ட தூரத்தில் வெறும் 3 நிலையங்கள் மட்டுமே இருந்தாலும், தொழில்நுட்ப ரீதியாக இது மிகவும் சவாலான பகுதியாகும். தண்டவாளம் அமைக்கும் பணிகளுடன் சேர்த்து, ரயில்களுக்கு மின்சாரம் வழங்கும் மேல்நிலை மின்சாரக் கம்பிகள் அமைக்கும் பணிகளும் ஒரே நேரத்தில் தொடங்கப்பட உள்ளன. இதற்காகத் தேவையான தண்டவாளங்கள் மற்றும் பிற தளவாட பொருட்கள் ஏற்கனவே அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன

தண்டவாளம் அமைக்கும் பணியை விட, பனகல் பூங்கா சுரங்கப்பாதை நிலையத்தை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் கட்டி முடிப்பதே தற்போதைய பெரிய சவாலாக உள்ளது. இந்த நிலையத்தில் சுமார் 5 நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்கள் அமைக்கப்பட வேண்டும். இவற்றை 2027ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடித்தால் மட்டுமே, ரயில்களைத் தடையின்றி இயக்க முடியும். எனவே, நிலைய கட்டுமானப் பணிகளை முடுக்கிவிட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த வழித்தடம் பயன்பாட்டிற்கு வரும்போது, தி.நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் பயனடைவார்கள். பனகல் பூங்கா நிலையம் செயல்பாட்டிற்கு வருவதன் மூலம், பயணிகள் 2ம் கட்ட மெட்ரோ பாதையிலிருந்து முதல் கட்ட மெட்ரோ பாதையுடன் எளிதாக இணைந்துகொள்ள முடியும். இது சென்னையின் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குச் செல்வோருக்குப் பயண நேரத்தை வெகுவாக குறைக்கும். சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இந்த சிறு வழித்தட பணிகளை அடுத்த ஆண்டு தொடக்கத்திற்குள் முடிக்க திட்டமிட்டுள்ளதால், சென்னையின் போக்குவரத்து கட்டமைப்பில் இது ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்பேடு முதல் சென்னை வர்த்தக மையம் வரையிலான 5வது வழித்தடப் பணிகளும் இதனுடன் இணையாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் தட்டம்மை பாதிப்பு குழந்தைகளுக்கு விரைந்து தடுப்பூசி செலுத்த வேண்டும்: மருத்துவர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.27–

தட்டம்மை பாதிப்பு சென்னையில் கணிசமாக பதிவாகி வரும் நிலையில் சரியான நேரத்தில் தடுப்பூசிகளை குழந்தைகளுக்கு செலுத்த மருத்துவகள் வலியுறுத்தி உள்ளனர். அண்மைக்காலமாக சென்னையில் தட்டம்மை பாதிப்புகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருவதாகவும், இவை கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடாததன் விளைவாக இருக்கலாம் என குழந்தைகள் நல மருத்துவர்கள் கருத்துகள் தெரிவித்துள்ளனர். இது பெற்றோர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளன. மேலும், கோடைக்காலம் தொடங்கியுள்ள இந்த சூழலில் இதுபோன்ற வைரஸ் தொற்றுகள் எளிதாக பரவும் அபாயம் இருப்பதால் போதிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து குழந்தை நல மருத்துவர்கள் கூறியதாவது: சமீபகாலமாக இந்த பாதிப்புகளுடன் வரும் குழந்தைகள் கொரோனா காலத்தில் 9 மற்றும் 15 மாதங்களில் செலுத்த வேண்டிய தட்டம்மை, ரூபெல்லா தடுப்பூசியின் முதல் அல்லது இரண்டாவது டோஸைத் தவறவிட்டவர்களாக உள்ளனர். அதேபோல், பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி அட்டவணையை முழுமையாகப் பின்பற்றாத பெற்றோரின் குழந்தைகளுக்கே இந்த பாதிப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. மேலும், பாதி தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் தட்டம்மை



யால் பாதிக்கப்பட்ட மற்றொரு குழந்தையுடன் தொடர்பில் வரும்போது, அவர்களுக்கும் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அரசு மருத்துவமனைகளில் தடுப்பூசிகள் இலவசமாக போடப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் தடுப்பூசி அட்டவணையைப் பின் பற்றுவது முக்கியமாகும். இந்த தட்டம்மை காய்ச்சல் குறைந்த பின்னரும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உடனடியாக வெளியில் அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தைகள் தாராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும் மற்றும் ஒன்று முதல் இரண்டு வாரங்கள் வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும். தட்டம்மைக்குப் பிறகு வைட்டமின் ஏ சத்து வழங்குவது முக்கியம். ஒட்டுமொத்தமாக தடுப்பூசி போடுவதே முதல் தடுப்பு நடவடிக்கையாகும். ஒரு குழந்தைக்குத் தட்டம்மை ஏற்பட்டால், இருமல் மூலம் பரவும் தொற்றுத் துகள்களிலிருந்து மற்ற குழந்தைகளை பாதுகாக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைகள் வீட்டிலேயே தங்கி போதுமான ஓய்வு எடுக்க வேண்டும். காய்ச்சலைத் தவிர, இதற்கு என்று குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை என்றாலும், சில குழந்தைகளுக்கு நிமோனியா மற்றும் காது தொற்று போன்ற சிக்கல்கள் ஏற்படலாம். எனவே பெற்றோர்கள் சரியான நேரத்தில் குழந்தைகளுக்கான தடுப்பூசியை செலுத்த வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

இது குறித்து பொது சுகாதாரத்துறை இயக்குனர் சோமசுந்தரம் கூறியதாவது: "மாநிலத்தின் நோய்த்தடுப்பு விகிதம் 99 சதவீதமாக உள்ளது. 9 மற்றும் 18 மாதங்களில் செலுத்தப்படும் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி 85 சதவீதம் செயல்திறன் கொண்டது மற்றும் போதுமான பாதுகாப்பை வழங்குகிறது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது தட்டம்மை பாதிப்பில் பெரிய உயர்வு எதுவும் இல்லை தட்டம்மை பாதிப்புகள் இருந்தாலும் அவை ஒரு குறிப்பிட்ட குழுவாகவோ அல்லது தொகுப்பாகவோ இல்லை. ஆனாலும், இதுபோன்ற பாதிப்புகளை தடுக்க தடுப்பூசியே பிரதானமான ஒன்றாகும். அதேபோல் குழந்தைகளுக்கு சத்து நிறைந்த உணவுகளை கொடுப்பது அவசியமாகும்" இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.20 குடிநீர் பாட்டில் ரூ.100க்கு விற்பது ஏன்? கேதார்நாத் கோயில் வளாகத்தில் உள்ள வியாபாரி விளக்கம்

உத்தராகண்ட், ஏப்.27–

உத்தராகண்ட் மாநிலம், ருத்ரபிரயாக் மாவட்டத்தில் கேதார்நாத் கோயில் அமைந்துள்ளது. சுமார் 11,755 அடி உயரத்தில் உள்ள இந்த கோயில் கோடை காலத்தில் மட்டுமே திறந்திருக்கும்.

கடந்த 22ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மக்கள் உத்தராகண்டின் கவுரிகுண்ட் பகுதியை சாலை வழியாக சென்றடைந்து, அங்கிருந்து 16 கி.மீ. தொலைவு பாதசாரியாக மலையேறி கேதார்நாத் கோயிலுக்கு செல்ல வேண்டும்.

சில நாட்களுக்கு முன்பு கோயில் வளாகத்தில் உள்ள கடையில் பெண் பக்தர் ஒருவர் குடிநீர் பாட்டில் வாங்கினார். ரூ.20 விலை



குறிப்பிடப்பட்ட ஒரு லிட்டர் பாட்டிலுக்கு கடைக்காரர் ரூ.100 வசூலித்தார். எதற்காக அதிக தொகை வாங்குகிறீர்கள் என்று பெண் பக்தர் கேட்டபோது கடைக்காரர் கூறியதாவது:

கேதார்நாத் கோயில் 5 மாதங்கள் வரை மட்டுமே திறந்திருக்கும். கோயில் வளாகத்துக்கு வருவதற்கு சாலை வசதி கிடையாது. இதனால் வாகனங்களில் பொருட்களை கொண்டு வர முடியாது. கோவேறு கழுதைகள் அல்லது தொழிலாளர்கள் மூலம் மட்டுமே பொருட்களை கோயில் வளாகத்துக்கு கொண்டு வர முடியும்.

ஒரு கோவேறு கழுதையில் 48 குடிநீர் பாட்டில்களை மட்டுமே எடுத்து வர முடியும். அதற்கு ரூ.3,500 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி தனது முதுகில் 40 கிலோ எடையை மட்டுமே சுமந்து வர முடியும். அவருக்கு ரூ.2,500 கூலி கொடுக்க வேண்டும்.

இந்த செலவைக் கணக்கிட்டே ரூ.20 மதிப்புள்ள ஒரு லிட்டர் குடிநீர் பாட்டிலுக்கு ரூ.80 முதல் ரூ.100 வரை வசூலிக்கிறோம். எங்களுக்கு குறைவான லாபம் மட்டுமே கிடைக்கிறது. இவ்வாறு கடைக்காரர் தெரிவித்துள்ளார். பெண் பக்தர், கடைக்காரர் இடையிலான இந்த உரையாடல் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.



# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு டைட்டானியம் உலோகத்தில் செயற்கை மார்பு எலும்பு

## கிண்டி கலைஞர் மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை

கிண்டி, ஏப்.27–

அரியவகை எலும்பு புற்று நோயால் பாதிக்கப்பட்ட நபருக்கு டைட்டானியம் உலோகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை மார்பு எலும்பை பொருத்தி கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்த சாரதி, ஒருங்கிணைப்பு அதிகாரி ரமேஷ் ஆகியோர் கூறியதாவது: சென்னையைச் சேர்ந்த 59 வயதான ராமசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), எலும்புகளில் ஏற்படும் அரிய வகை புற்று நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். புற்றுநோயின் தீவிரத்தால் மார்பு எலும்பு சிதைவடைந்து, இடது பக்கம் உள்ள 6 விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப் பகுதி வரை நோயின் தாக்கம் பரவியிருந்தது பரிசோதனையில் தெரியவந்தது.

இதையடுத்து, புற்று நோய் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சுஜய் சுசிகார் தலைமையில் மருத்துவர்கள் சக்தி உஷாதேவி, அருள், அருண் விக்டர், அரவிந்த், வரகுண பாண்டியன், சதீஷ், அருண் குமார் மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் கார்த்திகேயன், அருள், சுப்பிரமணியன், பவித்ரா அடங்கிய மருத்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இதில், பாதிக்கப்பட்ட மார்பு எலும்பு. விலா எலும்புகள், அதைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்கள் அகற்றப்பட்டன. இதனால், அப்பகுதியில் 15 வூ 10 செ.மீ. அளவுக்கு வெற்றிடம் உருவானது. இதையடுத்து, அவரது உடல் அமைப்புக்கு ஏற்ப, 3 டி தொழில் நுட்பம் மூலமாக டைட்டானியம் உலோகத்தில் பிரத்யேகமாக மார்பு எலும்பு வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டது. உடலின் மற்ற பகுதியில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு மார்பில் வைக்கப்பட்டன. சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் உள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் முதல் முறையாக கிண்டி மருத்துவமனையில் தற்போது இந்த அரிய, சிக்கலான உயர்தர அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் இதை மேற்கொள்ள ரூ.12 லட்சம் வரை செலவாகும். ஆனால், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் இலவசமாக செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் வெயில் சுட்டெரிக்கும்

## தனியார் வானிலை ஆய்வாளர் தகவல்

சென்னை, ஏப்.27–

மே 1 முதல் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் வெயில் சுட்டெரிக்கும். மாநிலத்தின் பிற பகுதிகளில் மழை திரும்பும் என்று தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது; "மே 1/2 முதல் உள்நாட்டு, தென் மற்றும் மேற்கு தமிழ்நாட்டில் மழை மீண்டும் தொடங்கினாலும், ஆந்திர எல்லைக்கு அருகிலுள்ள பகுதிகள் (KTCC – சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள்) கடும் வெயிலில் சுட்டெரியும்.

சென்னை புறநகர் பகுதிகளில் வெப்பநிலை எளிதாக 40குசிஜ கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வேலூரில் ஏப்ரல் 7, 2026 அன்று பதிவான 42குசி மீண்டும் எட்டப்படும் வாய்ப்பு உள்ளது.

எளிய வார்த்தைகளில் சொன்னால், ஆந்திராவுக்கு அருகிலுள்ள பகுதிகள் அதிக வெப்பத்தால் பாதிக்கப்படும். கடலோரத்தின் மிகவும் அருகிலுள்ள பகுதிகள் மட்டும் சற்றே தப்பிக்கலாம்.

சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள் மற்றும் வட தமிழ்நாடு மக்கள் கவனிக்கவும்: மே 1/2 முதல் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை நேரடி வெயிலில் செல்லாமல் இருக்கவும். எப்போதும் குடை மற்றும் தண்ணீர் பாட்டிலை எடுத்துச் செல்லவும்" என தெரிவித்துள்ளார்.



# பட்டாசு ஆலை உரிமையாளர்களுக்கு ஒன்றிய அரசு கட்டுப்பாடு

டெல்லி, ஏப்.27–

பட்டாசு மூலப் பொருட்கள் கலவை செய்யும் பணியை காலை 610 மணிக்குள் முடிக்க வேண்டும் என ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளது. அதிகரித்து வரும் வெயில் காரணமாக வெடி விபத்துக்கள் ஏற்பட கூடிதல் வாய்ப்புகள் உள்ளன. பட்டாசு மூலப் பொருட்களை கையாளும் தொழிலாளர்கள் மிகவும் கவனமுடன் செயல்பட வேண்டும் என ஒன்றிய அரசு கூறியுள்ளது.

# மணலி ஏரி படகு குழாமை சுற்றி ரூ.4.35 கோடியில் நடைபாதை பணி: மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு

திருவொற்றியூர், ஏப்.27–

திருவொற்றியூர் தொகுதி, மணலி மண்டலம், 20வது வார்டுக்கு உட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள மணலி ஏரியை தூர்வாரி சீரமைத்து சுற்றுலா தலமாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில், ரூ.8 கோடி செலவில் ஏரியை தூர்வாரி புனரமைத்து சிறுவர் விளையாட்டு பூங்கா, திறந்தவெளி உடற்பயிற்சி, நவீன கழிவறை மற்றும் உணவகங்கள் இவற்றுடன் படகு குழாம் அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி 13ம் தேதி படகு சவாரி துவக்கி பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

ஏரியை சுற்றி மின் விளக்குகள், இருக்கை வசதிகள், கழிப்பறைகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் காத்திருப்பு பகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் வசதியாக உள்ளது. மணலி ஏரியில் ஏற்கனவே 1.8 கிலோ மீட்டர் நீள நடைபாதை உள்ளது. இந்த பணிகளில் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளன. சரளைக்கல் பதிக்கும் பணி மட்டுமே மீதமுள்ளது. மேலும், மணலி ஏரியில் சுற்றுச்சுவர் கட்டுதல், மேடை அமைத்தல் மற்றும் பிற மேம்பாட்டு பணிகள் சுமார் ₹11.75 கோடியில் நடைபெற உள்ளது. ஏரியில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, நீர்வரத்து கால்வாய்களில் ஷட்டர் கேட்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால், வறண்ட காலங்களில் கூட ஏரிகள் சுத்தமாக இருக்கும். மணலி ஏரியில் இருந்து உபரி நீர் புழல் உபரி கால்வாய்க்கு செல்கிறது.

இந்தநிலையில் மணலி ஏரியை சுற்றி சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.4.35 கோடி செலவில் நடைபாதை, தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மணலி மண்டல உதவிஆணையர் (பொறுப்பு) தேவேந்திரன் உள்பட அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது பணிகளின் கட்டமைப்பு மற்றும் தரம் குறித்து ஒப்பந்ததாரர்களிடம் கேட்டறிந்து விரைவாக பணிகளை முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

# அதிருப்தியால் ஆம் ஆத்மியில் இருந்து வெளியேறினோம்: பா.ஜ.க.,வில் இணைந்த ராகவ் சத்தா எம்.பி. கருத்து

புதுடெல்லி, ஏப்.27–

ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலங்களவையில் 10 எம்.பி.க்கள் இருந்தனர். அவர்களில் ராகவ் சத்தா, சந்தீப் பதக், அசோக் மிட்டல், சுவாதி மாலிவால், ஹர்பஜன் சிங், ராஜீந்தர் குப்தா, விக்ரம்ஜித் சிங் சாஹ்னி ஆகிய 7 எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்துள்ளனர். இதுதொடர்பாக ராகவ் சத்தா நேற்று கூறியதாவது:

அச்ச உணர்வின் காரணமாக ஆம் ஆத்மியில் இருந்து விலகியிருப்பதாக அந்த கட்சி தலைவர்கள் கூறி வருகின்றனர். நாங்கள் அச்ச உணர்வால் விலகவில்லை. ஆம் ஆத்மி மீதான அதிருப்தி, விரக்தி, வெறுப்புணர்வு காரணமாக அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி உள்ளோம். ஆடம்பர மாளிகை விவகாரம் (கேஜ்ரிவால் வசித்த டெல்லி வீடு) காரணமாக



ஆம் ஆத்மி மீதான நன்மதிப்பு குறைந்து உள்ளது. இதன் காரணமாகவே கடந்த டெல்லி சட்டப்பேரவைத் தேர்தலில் அந்த கட்சி மோசமான தோல்வியை தழுவியது. தற்போது 2வது ஆடம்பர மாளிகை (கேஜ்ரிவாலின் தற்போதைய வீடு) விவகாரம் அம்பலமாகி உள்ளது. இந்த விவகாரம் குறித்து ஆம் ஆத்மி சுயபரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

கட்சியின் ஒவ்வொரு தொண்டரும் ரத்தம், வியர்வை சிந்தி மிகக் கடினமாக உழைத்தனர். கட்சி தலைமையிடம் மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருந்த அவர்கள் தற்போது அடுத்தடுத்து வெளியேறி வருகின்றனர். உண்மையை சொல்வதென்றால் ஆம் ஆத்மி தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அந்தக் கட்சியில் யாரும் நீடித்து நிலைத்திருக்க விரும்பவில்லை.

ஒரு கட்சியில் ஊழல் அதிகரித்தால் அந்த கட்சியின் எம்பிக்கள் அணி மாற அரசியலமைப்பு சட்டத்தில் இடம் உள்ளது. இதன் காரணமாகவே ஆம் ஆத்மியில் இருந்து ஒரே நேரத்தில் 7 எம்பிக்கள் வெளியேறி உள்ளோம். மாநிலங்களவையில் நாங்கள் தனி அணியாக செயல்படுவோம். பாஜகவுக்கு இணக்கமாக செயல்படுவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும்: மாணவர்களுக்கு நீதிபதி ஜெகதீஷ் சந்திரா அறிவுரை

சென்னை, ஏப்.27–

புதுப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

கேளம்பாக்கத்தை அடுத்த புதுப்பாக்கத்தில் உள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில், தமிழ்நாடு அரசு சட்டக்கல்வி இயக்குநர் கவுரி ரமேஷ் தலைமை வகித்தார். புதுப்பாக்கம் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் ஜெயகவுரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஜெகதீஷ் சந்திரா. சரவணன் ஆகியோர் பங்கேற்று 600 இளங்கலை மாணவ, மாணவிகளுக்கும், 30 முதுகலை மாணவ, மாணவிகளுக்கும் பட்டங்களை வழங்கினர்.




அப்போது நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசியதாவது, வழக்கறிஞர் தொழில் உன்னதமானது. இத்தொழிலில் வழக்கறிஞர் பேசுவதற்கு முன்பாகவே அவர் எப்படி என்று மதிப்பீடு செய்து விடுவார்கள். எனவே தோற்றம், கம்பீரம் இவை அனைத்தும் முக்கியம். நீதிமன்ற வழக்கறிஞர் உடைக்கு மதிப்பு உண்டு. அதை எப்போதும் நாம் மரியாதையுடன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மரியாதை என்பது பலவீனம் அல்ல. அது ஒரு கட்டுப்பாட்டுடன் கூடிய பலம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேசும் விதம், அமைதி, குரல் இவை உங்களின் திறமையை வெளிப்படுத்துகிறது. நீதிமன்றத்தில் நாம் குரலை உயர்த்தி பேசி வாதாடினால் ஜெயித்து விடுவோம் என்று எண்ணி விடாதீர்கள். அமைதியாக பேசி வாதாடி வெற்றி பெற்ற விஷயங்கள் அதிகம் உண்டு. சத்தமாக வாதாடினால் வெற்றி பெற முடியாது, சரியான முறையில் வாதாடினால் தான் வெற்றி பெற முடியும். கடந்த காலங்களை விட தற்போது உள்ள கால கட்டத்தில் சட்டக் கல்வி வேகமாக வளர்ந்து வருகிறது.

சட்டத்தை ஆழமாக படிக்க வேண்டும். தீர்ப்புகளை முழுமையாக வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் அதிகமாக வாதாடுவது கூட சில நேரத்தில் பலவீனத்தை ஏற்படுத்தும். எனவே துல்லியமாக, முக்கியமானதை சுருக்கமாக வாதாடினாலே வெற்றி தரும். நேர்மையாக. உண்மையாக இருக்க வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நீதிமன்றமும் நீதிபதிகளும் உங்களை நம்புவார்கள். பணம் படைத்தவர்களாக இருந்தாலும், எளியவர்களாக இருந்தாலும் மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். அனைவரையும் சமமாக மதிப்பது நற்பண்பு. இவ்வாறு அவர் கூறினார்.

பட்டறைப் பெரும்புதூர் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி முதல்வர் கயல்விழி, பேராசிரியர்கள். அலுவலக பணியாளர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவில், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி இணைப் பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.


# "அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை நடத்த முடியாது" ஈரான் அதிபர் உறுதி

தெஹ்ரான், ஏப்.27–

அழுத்தம், அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியில் ஈரான் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாது என்று அந்நாட்டின் அதிபர் மசூத் பெசஷ்கியான் தெரிவித்துள்ளார்.

மெஹர் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்புடனான தனது தொலைபேசி உரையாடலின் போது, பேச்சுவார்த்தைகள் மற்றும் போர்நிறுத்தக் காலம் ஆகிய இரண்டின் போதும் அமெரிக்காவின் தொடர்ச்சியான மீறல்களையும், அச்சுறுத்தும் நடவடிக்கைகளையும் ஈரான் அதிபர் பெசஷ்கியான் விமர்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள



கடல்சார் கட்டுப்பாடுகள் போர் நிறுத்தப் புரிந்துணர்வுகளின் தெளிவான விதிமீறல் என்றும், அவை ஐக்கிய நாடுகள் சாசனத்திற்கு முரணானவை என்றும் ஈரான் அதிபர் கூறினார். இத்தகைய அச்சுறுத்தும் நடவடிக்கைகள் என்பது அமெரிக்காவின் ராஜதந்திர செயல்முறைகள் குறித்த சந்தேகங்களை அதிகரித்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை பேணுவதில் ஈரானின் உறுதியை வலியுறுத்திய பெசஷ்கியான், அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால், அது பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மை மீது பெரும் விளைவுகளை உருவாக்கும் என எச்சரித்தார்.

நல்லுறவு மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில், பாரசீக வளைகுடாவின் தெற்குக் கரையோர நாடுகள் உட்பட அனைத்து அண்டை நாடுகளுடனும் உறவுகளைக் கட்டியெழுப்பவும், வலுப்படுத்தவும் ஈரான் உறுதியுடன் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். வெளி தலையீடுகள் இன்றி, பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த நாடுகள் கூட்டாகச் செயல்படும் என்றும் மசூத் பெசஷ்கியான் நம்பிக்கை தெரிவித்தார்.



# நீதிமன்ற கட்டிடங்கள் திறப்பு விழா

சேலம், ஏப்.27-

சேலம் அஸ்தம்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் 40க்கும் மேற்பட்ட நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகிறது. இங்கு கூடுதலாக 16 நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்படி கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ரூ.59 கோடியே 43 லட்சம் மதிப்பில் சேலம் நீதி மன்றம் முன்பகுதியில் 8 நீதிமன்றங்களும், பின்பகுதியில் 8 நீதிமன்றங்களும் என 5 மாடியில் கட்டப்பட்டது. இவை அனைத்து குளு குளு வசதி, லிப்ட் வசதி கொண்டவை. கடந்த 5 மாதங்களுக்கு முன்பே நீதிமன்ற கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தது. இதன் திறப்பு விழா நீதிமன்ற வளாகத்திலேயே இன்று நடைபெற்றது. சேலம் மாவட்ட முதன்மை நீதிபதி சுமதி வரவேற்புரை ஆற்றினார் . பொதுப் பணி துறையின் தலைமை இன்ஜினியர் ரங்கநாதன் திட்ட அறிக்கையை தாக்கல் செய்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சுப்ரீம் கோர்ட் நீதிபதி சுந்தரேஷ் தலைமை தாங்கி நீதிமன்ற கட்டிடத்தை திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதி காரி தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். ஐகோர்ட் நீதிபதி சுரேஷ்குமார், ஐகோரட் நீதிபதியும் சேலம் மாவட்டத்திற்கான பொறுப்பு நீதிபதியுமான ஜெயசந்திரன், ஐகோர்ட் நீதிபதி இளந்திரையன், ஐகோர்ட் நீதிபதியும் சேலத்திற்கான பொறுப்பு நீதிபதியுமான குமரப்பன், ஆகியோர் சிறப்புரை ஆற்றினார் .மேலும் இந்த நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட கலெக்டர் அருண் தம்பு ராஜ், மாநகர போலீஸ் கமிஷனர் அனில்குமார் கிரி, சேலம் மாவட்ட எஸ்பி கௌதம் கோயல், சேலம் வக்கீல் சங்க தலைவர் விவேகானந்தன், செயலாளர் நரேஷ்பாபு, குற்றவியல் வழக்கறிஞர் சங்க தலைவர் இமயவர்மன், செயலாளர் முருகன் உட்பட வழக்கறிஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் . நிகழ்ச்சியின் முடிவில் தலைமை நீதித் துறை நடுவர் கமலக்கண்ணன் நன்றி உரையாற்றினார்.



■ மதுரை மாவட்டம், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் சித்திரைத் திருவிழா பெருவிழாவை முன்னிட்டு பொதுமக்கள் கூடும் இடம் இடங்களில் முன்னேற்பாடு, பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்கே.ஜே.பிரவீன்குமார், நேரில் ஆய்வு செய்து பார்வையிட்டார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்விந்த், உடன் உள்ளனர்.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள லயோலா கல்லூரிக்குள் ஆம்புலன்ஸ் வந்ததால் போலீஸாருடன் தவெகவினர் வாக்குவாதம்

சென்னை, ஏப்.27-

லயோலா கல்லூரியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாக்கும் மையத்துக்குள் ஆம்புலன்ஸ் வாகனம் சென்றதையடுத்து, சந்தேகமடைந்த தவெக நிர்வாகிகள் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.சென்னையில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளில் பொதுமக்கள் வாக்களித்த மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சென்னை லயோலா கல்லூரி, அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் ராணிமேரி கல்லூரி ஆகிய மூன்று இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக, லயோலா கல்லூரி மையத்தில் அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர், பெரம்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் எழும்பூர் ஆகிய 6 தொகுதிகளின் வாக்குப் பதிவு இயந்திரங்கள் 'ஸ்ட்ராங் ரூமில்' வைக்கப்பட்டு, அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் சீல வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் 4 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதில் சுழற்சி முறையில், 30 மத்திய துணை ராணுவப் படை வீரர்கள், உதவி ஆணையர் தலைமையில் 15 தமிழ்நாடு சிறப்புப் படை வீரர் கள், 40 ஆயுதப்படை வீரர்கள், 50 சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து போலீஸார் என மொத்தம் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் இரவு, பகலாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு பணியாற்றும் காவலர்கள் மற்றும் ஊழியர்களுக்காகச் சிறப்பு மருத்துவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. திமுக, அதிமுக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் முகவர்கள் உரிய அனுமதி பெற்று, அங்குள்ள கட்டுப்பாட்டு அறை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் இரவு மருத்துவத் தேவைக்காக ஆம்புலன்ஸ் ஒன்று லயோலா கல்லூரி வளாகத்துக்குள் சென்றதாகக் கூறப்படுகிறது. இதைக் கண்ட தவெக நிர்வாகிகள், ஆம்புலன்ஸ் உள்ளே செல்வதில் சந்தேகம் இருப்பதாகக் கூறி பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.தவெகவினர் பிடிவாதம்: மேலும், அவர்களிடம் முறையான அனுமதி கடிதம் இல்லாத நிலையிலும், அடையாள அட்டையை மட்டுமே காட்டி உள்ளே செல்ல அனுமதிக்கு மாறு அவர்கள் பிடிவாதம் பிடித்தனர். இதனைத் தொடர்ந்து, அனுமதி கடிதம் இன்றி உள்ளே நுழைய முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்த போலீஸார், விதிகளை மீற வேண்டாம் என தவெக நிர்வாகிகளுக்கு கண்டிப்புடன் அறிவுரை வழங்கி அவர்களை அங்கிருந்து அனுப்பி வைத்தனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

தென்காசி. ஏப்.27-

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள்கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் பொருளாளர் சுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட தலைவர் குருசாமி நாடார் முன்னிலையில் நடைபெற்றது இந்த கூட்டத்தில் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் பனை தென்னை விவசாயிகளுக்கு அடையாள அட்டைக்கான விண்ணப்ப படிவத்தை வழங்கி பேசும்போது



தென்காசி மாவட்டத்தில் பனைத் தென்னை விவசாய்கள் புள்ளி விவர கணக்கெடுப்பு நடத்த இருக்கின்றோம் முதல் கட்டமாக தென்காசி மாவட்டத்தில் பனைமரம் ஏறுகின்றவர்கள் தென்னை மரம் ஏறுகின்றவர்கள் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் இதைச் சார்ந்து தொழில் செய்பவர்கள் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்று புள்ளி விவர கணக்கு எடுப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது பனைத் தென்னை விவசாயிகள் இந்த புள்ளி விவர கணக்கில் தங்களுடைய முழு விவரங்களை கொடுங்கள் நீங்கள் பாதுகாப்பாக உங்கள் தொழிலை செய்வதற்கும் நீங்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் உங்களுக்கு ஒரு அடையாள அட்டை வழங்கப்படும் தமிழக அரசுக்கும் காவல்துறைக்கும் தென்காசி மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் எந்தெந்த காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கிராமங்களில் எத்தனை நபர்கள் பனை தென்னை ஏறுகிறார்கள் எத்தனை நபர்கள் பனை சார்ந்து தொழில் செய்கின்றார்கள் என்ற புள்ளி விவரங்கள் அரசுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் காவல் துறை கண்காணிப்பாளருக்கும் புள்ளி விவரக் கணக்குகள் கொடுக்கப்பட்டு அவர்களிடத்தில் சில கோரிக்கைகளை தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் முன்வைக்கப்பட இருக்கிறோம் இதற்கு பனைத் தென்னை விவசாய்கள் முழுமையாக ஆதரவு தந்து இந்த சரியான கணக்கெடுப்பு நடத்த உதவ வேண்டும் தடையை மீறி கள் இறக்குவோம் என்று பனை விவசாயிகளை தூண்டிவிடும் நாடார் சங்கங்களே சட்டத்தை மதிப்பதற்கு கற்றுக் கொடுங்கள் சட்டத்தை மீறி செயல்படுவதற்கு கற்றுக் கொடுக்காதீர்கள் கள்ளுக்கான தடையை நீக்க போராட அழைப்பு கொடுங்கள் பனைத் தென்னை விவசாயிகளை தவறான விதத்தில் வழி காட்டாதீர்கள் வழி நடத்தாதீர்கள் என்று பேசினார் இந்த நிகழ்ச்சியில் பனை விவசாயிகள் தென்னை விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் மத்திய மாவட்ட தலைவர் கடையநல்லூர் முருகன் நன்றி கூறினார்

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு டைட்டானியம் உலோகத்தில் செயற்கை மார்பு எலும்பு

சென்னை, ஏப்.27-

அரியவகை எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட நபருக்கு டைட்டானியம் உலோகத்தில் தயாரிக்கப்பட்ட செயற்கை மார்பு எலும்பை பொருத்தி கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்த சாரதி, ஒருங்கிணைப்பு அதிகாரி ரமேஷ் ஆகியோர் கூறியதாவது: சென்னையைச் சேர்ந்த 59 வயதான ராமசாமி (பெயர் மாற்றப்பட்டுள்ளது), எலும்புகளில் ஏற்படும் அரிய வகை புற்று நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். புற்றுநோயின் தீவிரத்தால் மார்பு எலும்பு சிதைவடைந்து, இடது பக்கம் உள்ள 6 விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப் பகுதி வரை நோயின் தாக்கம் பரவி யிருந்தது பரிசோதனையில் தெரியவந்தது.இதையடுத்து,



புற்று நோய் அறுவை சிகிச்சைத் துறை தலைவர் சுஜய் சுசிகார் தலைமையில் மருத்துவர்கள் சக்தி உஷாதேவி, அருள், அருண் விக்டர், அரவிந்த், வரகுண பாண்டியன், சதீஷ், அருண் குமார் மற்றும் மயக்கவியல் மருத்துவர்கள் கார்த்திகேயன், அருள், சுப்பிரமணியன், பவித்ரா அடங்கிய மருத்துவக் குழுவினர் அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.இதில், பாதிக்கப்பட்ட மார்பு எலும்பு. விலா எலும்புகள், அதைச் சுற்றியுள்ள மென்மையான திசுக்கள் அகற்றப்பட்டன. இதனால், அப்பகுதியில் 15 வூ 10 செ.மீ. அளவுக்கு வெற்றிடம் உருவானது. இதையடுத்து, அவரது உடல் அமைப்புக்கு ஏற்ப, 3 டி தொழில் நுட்பம் மூலமாக டைட்டானியம் உலோகத்தில் பிரத்யேகமாக மார்பு எலும்பு வடிவமைக்கப்பட்டு, பொருத்தப்பட்டது. உடலின் மற்ற பகுதியில் இருந்து திசுக்கள் எடுக்கப்பட்டு மார்பில் வைக்கப்பட்டன. சிகிச்சைக்குப் பிறகு அவர் நலமுடன் உள்ளார்.அரசு மருத்துவமனைகளில் முதல் முறையாக கிண்டி மருத்துவமனையில் தற்போது இந்த அரிய, சிக்கலான உயர்தர அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனையில் இதை மேற்கொள்ள ரூ.12 லட்சம் வரை செலவாகும். ஆனால், முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் இலவசமாக செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பாகிஸ்தான் பிரதமருடன் ஈரான் அமைச்சர் சந்திப்பு

இஸ்லாமாபாத், ஏப்.27-

அமெரிக்கா ஈரான் பிரதிநிதிகள் இடையே கடந்த 11, 12ம் தேதிகளில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. எனினும் அமைதி முயற்சிக்காக காலவரையின்றி போர் நிறுத்தம் அமல் செய்யப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்து உள்ளார்.இந்த சூழலில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தலைமையிலான குழு நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் சென்றது. அங்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீபை ஈரான் அமைச்சர் அராக்சி நேற்று சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது இஷாக் தார், ராணுவ தளபதி அசிம் முனீர் ஆகியோரும் உடன் இருந்தனர்.இதுகுறித்து ஈரான் அரசு வட்டாரங்கள் கூறும்போது, “அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தையில் பங்கேற்க மாட்டோம். எங்களது கோரிக்கைகள், நிபந்தனைகளை பாகிஸ்தான் தரப்பிடம் கூறியுள்ளோம். அவர்கள் அமெரிக்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக தீர்வை காண முயற்சி செய்வார்கள்” என்று தெரிவித்தன.

இதனிடையே அமெரிக்க அரசின் சிறப்பு தூதர்கள் ஸ்டீவ் விட்காப், ஜெராட் குஷ்னர் ஆகியோர் விமானத்தில் இஸ்லாமாபாத் புறப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, மஸ்கட் மற்றும் ரஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்து அந்த நாடுகளின் தலைவர்களுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார். அவரது ரஷ்ய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# மேற்கு வங்க மாநிலத்தில் பிரச்சாரம் தீவிரம்: ஏப்ரல் 29ல் இரண்டாம் கட்டத் தேர்தல்

கொல்கத்தா, ஏப்.27-

மேற்கு வங்கத்தில் வரும் 29ம் தேதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் 2 கட்டமாக நடைபெறுகிறது. முதல்கட்டமாக கடந்த 23ம் தேதி 152 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதமுள்ள 142 தொகுதிகளுக்கு ஏப்ரல் 29ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் அங்கு தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.



பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் நேற்று பாரா நகரில் பிரம்மாண்ட ரோடு ஷோ நடத்தினார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "மேற்கு வங்கம் தனது பழைய பெருமையை மீட்டெடுக்கவும், அச்ச அரசியலைத் தீர்க்கமாக நிராகரிக்கவும் தயாராக உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.அதேபோல், மேற்கு வங்க எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர்கள் மீது ஊழல் மற்றும் திருப்திப்படுத்தும் அரசியல் புகார்களைக் கூறி கடும் தாக்குதலைத் தொடுத்துள்ளார்.திரிணமூல் காங்கிரஸ் தலைவர் குணால் கோஷ், முதற்கட்ட வாக்குப் பதிவில் தங்கள் கட்சி வலுவாகச் செயல்பட்டுள்ளதாகக் கூறினார். மேலும், திரிணமூல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்கும் என்றும் அவர் உறுதிப்படத் தெரிவித்தார்.

காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பி.க்களான பிரமோத் திவாரி மற்றும் அகிலேஷ் பிரசாத் ஆகியோர் நேற்று கூறும்போது, "சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்கத்தில் ஆட்சி அமைப்பதில் காங்கிரஸ் தீர்க்கமான பங்கை வகிக்கும்" என்று உரிமை கோரினர். மேற்கு வங்கத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் எந்தக் கூட்டணியும் இன்றி தனித்துப் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000